**MCOP 14 of 2022 c/w 15 of 2022**

Date : 10.06.2026.

எ.சா. 1: சுப்பிரமணியன்

எ.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

நான் தற்போது 1ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் வேலை பார்க்கவில்லை. எந்த வருடம் ஓய்வு பெற்றேன் என்றால் 2020 ம் ஆண்டு வெளியே வந்துவிட்டேன். விபத்து சம்மந்தமாக சாத்தான்குளம் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. விபத்து சம்மந்தமாக 1ம் எதிர்மனுதாதரர் தரப்பில் புகார் கொடுக்கவில்லை. விபத்து சம்மந்தமாக சாத்தான் குளம் காவல் நிலையத்தில் என் மீதுதான் முதல் தகவல் அறிக்கையும், குற்ற இறுதி அறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். இழப்பீடு கேட்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் நான் 2ம் எதிர்மனுதாரராக கட்சி சேர்க்கப்பட்டு நான் ஆஜர் ஆகாமல் தோன்றா தரப்பினராக உள்ளேன் என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் இட்டமொழி யில் இருந்து சாத்தான் குளம் செல்லும் பிரதான சாலை என்றால் சரிதான். விபத்து நடந்த சமயம் மாலை 6 ல் இருந்து 6.30 மணி அளவு இருக்கும் என்றால் சரிதான். அந்த சமயத்தில் நான்கல்லூரி மாணவர்களை இறக்குவதற்காக சென்று கொண்டிருந்தேன் என்றால் சரிதான். சுமார் எத்தனை மாணவர்கள் இருந்தார்கள் என்றால் 15 பேர் இருந்தனர். என் பேருந்துக்கு முன்பாகத்தான் இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்ற நபர் சென்று கொண்டிருந்தார் என்றால் சரிதான். என் பேருந்தின் இடது பக்க பம்பர் மோதிதான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். நான்தான் முன்னாடி சென்று கொண்டிருந்த இருசக்கர வாகனத்தை முந்துவதற்காக முந்தி சென்று அஜாக்கிரதையாக சென்று விபத்தை ஏற்படுத்திவிட்டேன் என்றால் சரியல்ல. நான் மேற்படி பேருந்தில் 6 வருடமாக ஓட்டுநராக வேலை பார்த்தேன். ஓட்டுநர் என்ற முறையில் பேருந்தை இயக்குவதற்கு முன்பாக என்னென்ன ஆவணங்கள் சரிபார்க்க வேண்டும் என்றால் வண்டியின் அனுமதி சீட்டு, தகுதி சான்றிதழ், வண்டியின் காப்பீட்டு சான்றிதழ் ஆகியவை சரிபார்க்க வேண்டும். விபத்து சமயத்தில் நான் ஓட்டிய வாகனத்திற்கு தகுதி சான்று மற்றும் காப்பீடு சான்று இருந்ததா என்றால் இல்லை. ஆக வேண்டுமென்றே தகுதி சான்று மற்றும் காப்பீடு சான்று இல்லாத பேருந்தை அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் இயக்கியதால் மனுதாரர்களுக்கு

இழப்பீடு வழங்க நானும் 1ம் எதிர்மனுதாரரும் கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள தீர்ப்புரை சந்தேகத்தின் பலனை சாதகமாக்கி தீர்ப்பு வழங்கியுள்ளதால் மேற்படி தீர்ப்புரை இந்த விபத்து வழக்கிற்கு பொருந்தாது என்றால் சரியல்ல.